தவக்கால வார இடைநாளுக்கான வழிபாட்டு ஒழுங்கு

நடத்துபவர் : மீட்பராம் நமது ஆண்டவர் உங்களோடு இருப்பாராக

அனைவரும் : அவர் உம்மோடும் இருப்பாராக

நடத்துபவர் :மீட்பராம் எங்கள் கடவுளே, உமதுமுன் மனந்திரும்புதலுடன் உமது திருமுன்னர் வருகின்றோம். எங்கள் பாவங்களிலிருந்து எங்களை மீட்டருளும், தீமையின் கட்டுகளிலிருந்து எங்களை விடுவியும். இன்று உமது திருவார்த்தை எங்களில் இருக்கும் இருளை விரட்டுவதாக. பிறருக்காக நாங்கள் ஒளிர்ந்திட எங்களை ஒளிதீபங்களாக ஏற்றியருளும். ஆமென்.

பாடல்

நடத்துபவர் :தம்மிடம் அண்டிவர அழைக்கின்ற இறைவனின் குரலுக்கு செவி சாய்ப்போமாக.

(சற்று இடைவெளிக்குப் பின்னர் கொடுக்கப்பட்டுள்ள சங்கீதங்களில் ஒன்றைப் படிக்கவும்.) சங்கீதம் 46/53/54

(அமைதி)

நடத்துபவர் : பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக.

அனைவரும் : ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக.. ஆமென்.

பாவ அறிக்கை:

நடத்துபவர் : எல்லாம் வல்ல கடவுளே, எங்கள் உள்ளங்களை அறிகிறவரே, எந்த இரகசியமும் உமக்கு மறைவானதல்ல. உமில்ம நிறைவாக அன்பு கூரவும், உமது தூய திருப்பெயரை மகிமைப் படுத்தவும் உமது தூயாவியினால் எங்கள் உள்ளத்தைத் தட்டியெழுப்பி அருளும். எங்கள் ஆண்டவர் கிறிஸ்து வழியே வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

அனைவரும் : மனதிரக்கமுள்ள எங்கள் ஆண்டவரே, தன்னலம் மற்றும் எண்ணமற்ற வார்த்தைகள் மற்றும் செயல்களிலிருந்து எங்களளைக் காப்பாற்றும். உமது வார்த்தையின்படி நாங்கள் வாழவில்லை,. உமதுசாட்சிகளாக நாங்கள் வாழத் தவறிவிட்டோம். உமது பார்வையில் மிகவும் பரிதபிக்கதீ தக்க குற்றவாளிகளாகிய எங்கள் மீது இரக்கமாயிரும். உமது மகா இரக்கத்தின்படி எங்களை சுத்திரித்து, எங்கள் பாவங்களிலிருந்து எங்களை மீட்டு, நித்திய வாழ்வை அருள்வீராக. ஆமென்.

பாவ மன்னிப்பு: இரக்கமுள்ள எல்லாம் வல்ல ஆண்டவர், உங்கள் பாவங்கள் எல்லாவற்றையும் மன்னித்து, வாழ்வை சிதைக்கின்ற எல்லா கட்டுகளிலிருந்தும் உங்களை விடுதலையாக்கி, உங்களை நித்திய ஜீவகரையில் சேர்ப்பாராக. ஆமென்.

திருமறைப் பாடங்கள்

கீர்த்தனை / ஞானப்பாட்டு

அருளுரை

அப்போஸ்தலரின் விசுவாசப் பிரமாணம்

சரணடைய இறைவேண்டல்

நடத்துபவர் மனதுருக்கமும் மன்னிப்பும் கர்த்தராகிய நம் கடவுளுடையது. நாமோ அவருக்கு எதிராக கிளர்ந்தெழுந்தோம். நமது கடினநிலைப்பாட்டை விட்டுவிட்டு அவரது இரக்கத்தைக் கெஞ்சுவோமாக. நமக்கு உறுதுணையாக நமது ஆண்டவரின் திருப் பெயரே உள்ளது.

அனைவரும் : அவரே வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவர்.

நடத்துபவர் : நான் எனது மீறுதல்களைக் கர்த்தரிடம் அறிக்கை செய்வேன் என்றேன்.
அனைவரும் : என் அக்கிரமத்தை நீரே மன்னித்தீர்.

நடத்துபவர் : ஆண்டவரே, உமது கனிவிரக்கத்தையும் அன்பையும் நினைத்தருளும், ஏனெனில் அவை நித்தியமானவை.

அனைவரும் : கர்த்தாவே எங்கள் மீது இரக்கமாயிரும்.

நடத்துபவர் : என் இளவயதின் பாவங்களையும், என் மீறுதல்களையும் நினையாதிரும். உமது நற்குணத்தால் கிறிஸ்துவின் பாடுகள் நிமித்தம் என்னை நினைந்தருளும்.

அனைவரும் : கர்த்தாவே எங்கள் மீது இரக்கமாயிரும்.

நடத்துபவர் : என் ஆத்துமாவை விடுவித்துக் காத்தருளும், ஏனெனில் நான் உம்மிலே உறுதியான நம்பிக்கை வைத்துள்ளேன்.

அனைவரும் : கர்த்தாவே எங்கள் மீது இரக்கமாயிரும்.
நடத்துபவர் : பாவிகளை மீட்டெடுக்கத் தமது மைந்தனை அனுப்பி வைத்த எல்லாம் வல்ல கடவுள் நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியே நமது பாவங்களை மன்னித்து, நம்மை அவருக்கு நேராகத் திருப்பி, நித்திய அன்பில் நிலைத்திருக்கச் செய்வாராக.

அனைவரும் : ஆமென்.

(தேவாட்டுக் குட்டியின் புகழ் கீதத்தைப் பாடலாம் அல்லது சொல்லலாம்.)

அனைவரும்:உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியே, எங்களுக்கு இரங்கும்.
உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியே, எங்களுக்கு இரங்கும்.
உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியே, உமது சமாதானத்தைத் தாரும்.

காணிக்கைப் பாடல்

ஜெபம்

இறையாசி

நிறைவுப் பாடல்

அமைதியாகக் கலைதல்.